# சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in ✆ : 2860 7821,Cell : 7824034734

பதிவு எண் 446/96

## செயலாளர் அறிக்கை

04.08.2023
சென்னை

அன்பார்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம் !

சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் எங்களுக்கு கொடுத்து வந்த ஊக்கத்தின் காரணமாக , முதல் வருடத்தை மன மகிழ்ச்சியுடன் நிறைவு செய்திருக்கிறோம். கடந்த ஆண்டு CVPA தேர்தலை நமது தலைமை தேர்தல் அதிகாரி திரு. லயன். விஜயகுமார் அவர்கள் வெகு சிறப்பாக நடத்திக் கொடுத்தார் வெற்றி பெற்ற அனைவருக்கும் பதவி பிரமாணம் செய்து வைத்து, அதற்குரிய அங்கீகார சான்றிதழ்களையும் எங்களிடம் அவர் வழங்கினார் அன்று முதல் நாங்கள் அனைவரும் தலைவர் செல். செல்வம் அவர்கள் தலைமையில் எங்கள் பணியை செய்து வருவதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக நாங்கள் பதவியேற்றுக்கொண்ட பிறகு 2022 செப்டம்பர் மாதம் ரினிவல் தொடங்கி கடந்த 2023 ஜூன் மாதம் வரை 1082 சங்க உறுப்பினர்கள் தங்கள் ரினிவலை தொடர்ந்து செய்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இவர்களைத் தவிர 182 பேர் புதிய உறுப்பினர்களாக சேர்ந்து இருக்கிறார்கள்.47 பேர் ஆயுட்கால உறுப்பினர்களாகவும் இதே காலகட்டத்தில் சேர்ந்துள்ளார்கள் . பொதுவாக சங்க தேர்தல் நடைபெறாத காலத்தில் நமது சங்கத்தில் யாரும் ரினிவல் செய்ய முன் வர மாட்டார்கள் என்கிற ஒரு கருத்து நிலவுகிறது . இப்பொழுது நடந்திருப்பது உண்மையில் தேர்தலுக்கான ரெனிவல் இல்லை. இதை பொய் பிரச்சாரம் செய்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இது நமது சங்கத்தின் மீதும், இந்த நிர்வாகத்தின் மீதும் உறுப்பினர்களாகிய நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்.

நமது சங்க உறுப்பினர்களாகிய நீங்கள் இந்த நிர்வாகத்தை மதித்து உங்கள் இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள எங்களுக்கு அழைப்பு விடுக்கிறீர்கள் நிர்வாகிகளாகிய நாங்கள் எவ்வித வேறுபாடும் காட்டாமல் நீங்கள் விடுக்கும் அழைப்பிற்கு மதிப்பு கொடுத்து உங்கள் இல்ல நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறோம். ஒருவேளை நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் போது, நமது சங்கத்தின் சார்பில் துணைத் தலைவர்கள் , இணைச் செயலாளர்கள் அல்லது பகுதி செயலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அயன்புரம், திருவான்மியூர், சோழிங்கநல்லூர், வேளச்சேரி, மடிப்பாக்கம், போன்ற பகுதிகளை சேர்ந்தவர்கள் , புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம், பாராட்டு விழா என ஏற்பாடு செய்து எங்கள் அனைவரையும் ஆரம்பத்திலேயே ஊக்குவித்தார்கள். இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், ஊக்கப்படுத்தும் விதமாகவும் இருந்தது. இப்பொதுக் குழு மூலம் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சோழிங்கநல்லூர் திருவான்மியூர் வேளச்சேரி பகுதிச் செயலாளர் ஏற்பாடு செய்திருந்த அறிமுக கூட்டத்தில் அன்றைய தினமே சைதை சேவியர் அவர்களுடைய ஈடியஸ் வொர்க் ஷாப்பும் நடைபெற்றது

நாங்கள் அனைவரும் கலந்து கொண்ட முதல் நிகழ்வே, மாநில சங்கத்தின் நிகழ்வாக அமைந்து விட்டது. ஆம், பல்வேறு மாவட்ட சங்கங்களைச் சேர்ந்தவர்கள், நமது சங்க தேர்தல் முடிவை அப்போது ஆவலோடு எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த நிலையில், மாநில சங்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த வருடம் ஆகஸ்டு 3ஆம் தேதி கூடலூரில் கூடியது. அனைத்து மாவட்ட சங்க நிர்வாகிகளும் நமது புதிய நிர்வாகத்தை வாழ்த்தி வரவேற்றதை நாங்கள் அனைவரும் தலை வணங்கி ஏற்றுக் கொண்டோம். சென்னை மாவட்ட சங்கத்தின் மீது அவர்கள் வைத்திருக்கும் மதிப்பு அளவிட முடியாததாகவே இருந்தது.

இந்த நிர்வாகத்தில் முதல் நிர்வாக குழு கூட்டம் 13.08.2022 அன்று கூடியது. இதில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு. அது செயற்குழு கூட்டத்தின் ஒப்புதலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் சரவணன் அவர்களும் , முன்னாள் செயலாளர் துரைபாபு அவர்களும் சங்க அலுவலகத்திற்கு நேரில் வந்து பழைய நிர்வாகத்தின் கணக்கு வழக்குகளை, புதிய நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர். அதை இன்றைய பொருளாளர் ஜெயபால் அவர்கள் முறையாக பெற்றுக் கொண்டார். எங்கள் நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் தலைவர் சரவணன் அவர்களுக்கும், முன்னாள் செயலாளர் துரைபாபு அவர்களுக்கும், நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in ✆ : 2860 7821,Cell : 7824034734

பதிவு எண் 446/96


ஆகஸ்ட் 15ஆம் தேதி நமது சங்க அலுவலகத்தில் சுதந்திரதின விழா கொண்டாடப்பட்டது. CVPA செயலாளர், D.M.பிரேம்குமார் ஆகிய நான் தேசியக்கொடியை ஏற்றி வைத்தேன். நமது சங்கத் தலைவர் செல். செல்வம் அவர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். மேலும் மாநில சங்க துணைத் தலைவர் சரவணன் அவர்களும், மண்டல செயலாளர் மோகனசுந்தரம் அவர்களும், நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகளும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆகஸ்ட் 16ஆம் தேதி இந்த புதிய நிர்வாகத்தின் முதல் செயற்குழு கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் வரும் ஆண்டுக்கான செயல் திட்டங்கள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன . குறிப்பாக CVPA தேர்தலில் பகுதி செயலாளர் பதவிக்கு நிரப்பப்படாத இடங்களாக பொதுக்குழுவில் அறிவிக்கப்பட்ட வில்லிவாக்கம், புரசைவாக்கம் , தி.நகர், போரூர் ,அசோக் நகர், ஆதம்பாக்கம், வடபழனி , மதுரவாயில் ஆகிய பகுதிகளுக்கு செயற்குழுவில் முறையாக விண்ணப்பித்தவர்களுக்கு பகுதி செயலாளர் பதவி வழங்கலாம் என, பொதுக்குழுவின் தீர்மானப்படி , செயற்குழுவில் விண்ணப்பித்த வில்லிவாக்கம் பகுதிக்கு ராஜன் அவர்களும், புரசைவாக்கம் பகுதிக்கு சீனிவாசன் அவர்களும், தி.நகர் பகுதிக்கு பழனிவேலு அவர்களும், செயற்குழுவின் ஒப்புதலோடு நியமிக்கப்பட்டனர். இது தவிர பகுதி செயலாளர்கள் நிரப்பப்படாத பகுதிகளாக, ஆதம்பாக்கம், அசோக் நகர், போரூர் மதுரவாயில் ஆகிய பகுதிகளுக்கும், அந்தந்த பகுதியில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

உலகப் புகைப்பட தினமான ஆகஸ்ட் 19 ஆம் தேதி உலக புகைப்பட தினம் கொண்டாடுவதை நமது CVPA சங்கம் ஒவ்வொரு ஆண்டும் தவறாமல் செய்து வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு நமது சங்கத்தின் கௌரவத் துணைத் தலைவர் கலைமாமணி திரு.யோகா அவர்கள் தலைமையில், மாநிலத் துணைத் தலைவர் சரவணன் மற்றும் நமது சங்க தலைவர் செல். செல்வம் அவர்கள் முன்னிலையில், நமது சங்கத்தின் முன்னாள் செயலாளர் துரைபாபு மற்றும் முன்னாள் சக நிர்வாகிகள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்களும் ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டார்கள்.

உலக புகைப்பட தினமும் அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், நமது சங்கம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி CVPA பெயரை ஸ்டிக்கரில் பதிவு செய்து அதை, ஆட்டோ, கார், ஸ்கூட்டர், பைக் போன்ற வாகனங்களில் ஒட்டவும் முடிவு செய்யப்பட்டது.இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை கலைமாமணி யோகா அவர்கள் தொடங்கி வைத்தார்.

நமது வட சென்னை சங்க உறுப்பினர் குகன் அவர்களின் மகள் ஜெயஸ்ரீ அவர்கள் உலக அளவில் நடைபெற்ற கிக் பாக்சிங் போட்டியில் பங்கு பெற தகுதி பெற்றிருந்தாலும், பொருளாதார ரீதியாக பணப் பிரச்சனை இருந்த காரணமாக அந்த போட்டியில் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை இருந்தது. இது நமது வட சென்னை துணைத்தலைவர் கௌஸ் பாட்ஷா அவர்களின் கவனத்திற்கு வந்ததும், அவருடைய மேலான முயற்சியின் காரணமாக, நமது சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மாநில சங்க நிர்வாகிகள், மற்றும் மாவட்ட சங்க உறுப்பினர்கள், நண்பர்கள் என பலரும் உதவியதை தொடர்ந்து, 35 ஆயிரம் ரூபாய் பணம் சேர்ந்தது. இந்த பணத்தை கலைமாமணி யோகா அவர்கள் மூலமாக, நமது சங்க வட சென்னை உறுப்பினர் குகன் அவர்களின் மகள் ஜெயஸ்ரீயிடம் வழங்கப்பட்டது. நாம் சிறிய அளவில்தான் உதவி செய்தோம். ஆனால் அவருக்காக அளித்த ஊக்கம் பெரியது. இதன் காரணமாக இன்று இவர் இந்தோனேசியாவில் நடைபெற்ற கிக் பாக்சிங் போட்டியில் கலந்துகொண்டு தங்கக் கோப்பை வென்று வெற்றியும் பெற்று விட்டார். இப்பொதுக் குழுவில் நமது சங்கம் சார்பாக அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் பெருமைக்குரிய நிகழ்வாகக் கருதப்படும் குடும்ப விழா கொரோனா காலத்தில் சில ஆண்டுகள் தடைபட்டு போயிருந்தது. இந்த நிர்வாகம் பொறுப்பேற்றவுடன், குடும்ப விழா நடத்துவதில் இரு வேறு கருத்துக்கள் நிலவி வந்தன. எனினும் பொருளாதார பிரச்சினையை கருத்தில் கொண்டு, விளம்பரதாரர்கள் கிடைத்தால் மட்டுமே , குடும்ப விழா நடத்திக் கொள்ள செயற்குழு நமக்கு ஒப்புதல் அளித்தது. ஆனால், அப்போது வியாபாரம் மந்தமாக இருந்த நிலையில், நமக்கு வழக்கமாக வரும் விளம்பரதாரர்கள் யாரும் ஸ்பான்சர் செய்ய முன் வராத நிலையில், இந்த முறை சின்ன சின்ன

நிறுவனங்களைக் கொண்டு, குடும்ப விழாவை நடத்த முடிவு செய்தோம். அதன்படி விளம்பரதாரர்கள் மூலமாக ஏறக்குறைய மூன்று லட்ச ரூபாய் வரை நன்கொடையாக பெற்று மிகக் குறுகிய காலத்தில் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை மதுரவாயல் பகுதி, காட்டுப்பாக்கம், AK மஹாலில் குடும்ப விழா வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. குறிப்பாக. நமது சங்கத்தை சேர்ந்த 60 உறுப்பினர்களுடைய, குழந்தைகளுக்கு கல்வி ஊக்கத்தொகை பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்று தரப்பட்டது. இவர்கள் அனைவருக்கும் நமது நிர்வாகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேசமயம் இந்த குடும்ப விழாவிற்கு திருமண மண்டபத்தை கட்டணம் இன்றி (மின் கட்டணம், கிளினிங் தவிர) கொடுத்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.அருள் அன்பரசு அவர்களுக்கும், இதற்கு உதவிய தேனாம்பேட்டை பகுதி செயலாளர் TM.ரவி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நமது சங்க உறுப்பினர்களுக்காக 1லட்சம் ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு நல்ல அறுசுவை உணவுக்கு ஏற்பாடு செய்து கொடுத்த இன்றைய மாநில சங்க துணைத் தலைவர் திரு.சரவணன் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குடும்ப விழாவில் கடைசி வரை இருந்து சிறப்பித்த முன்னாள் செயலாளர் துரைபாபு அவர்களுக்கும் , ஏனைய முன்னாள் சக நிர்வாகிகளுக்கும், குடும்பத்துடன் கலந்து கொண்ட நமது உறுப்பினர்களுக்கும், மற்றும் கலை நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் கலந்து கொண்ட குழந்தைகளுக்கும் குடும்ப விழா சிறப்பாக நடைபெற உதவிய நிர்வாக குழு செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்க உறுப்பினர்களுக்கு இப்போது QR கோடுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட அழகிய அடையாள அட்டை , ரோப், மற்றும் ஹோல்டர் வழங்கி வருகிறோம். இதற்கு சங்க உறுப்பினர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. புதிய, பழைய, ஆயுட்கால உறுப்பினர்களுக்கும் ரோப், ஹோல்டர் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் மாநில சங்கம் சார்பில் நடைபெற்ற 'டிஜிமீடியா எக்ஸ்போ 2022'எல்லோருடைய பாராட்டைப் பெற்று மிகப்பெரிய வெற்றியை கண்டது, மகிழ்ச்சியாக உள்ளது.இனி வரும் காலங்களில் இந்த வெற்றி தொடர வேண்டும் என்று விரும்புகின்றோம்.

சென்னை மாவட்டத்தின் பங்களிப்பு சிறிதளவு இருந்தாலும், உடனிருந்து ஒத்துழைத்த நமது சென்னை மாவட்ட சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த எக்ஸ்போ நடத்தியதன் மூலம் சென்னை மாவட்ட சங்கத்திற்கு மாநில சங்கம் சார்பாக 25.07.2023 அன்று நடைபெற்ற மாநில சங்க செயற்குழுவில் ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு உதவிய மாநிலத் துணைத் தலைவர் திரு சரவணன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது வட சென்னை உறுப்பினர் திரு. முஸ்தபா அவர்கள் புதிய கேமரா மற்றும் லென்ஸ் வாங்கும் போது, கேமரா டீலர் கொடுத்த பில்லில் சீரியல் நெம்பர் மாறிப்போனது. இதை இரு தரப்பினருமே கவனிக்க தவறியதால், சர்வீசுக்கு போகும்போது பிரச்சனை ஏற்பட்டது. சங்கம் சார்பில் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தி புதிய லென்ஸ் பெற்று தரப்பட்டது. கேமரா தயாரிப்பு நிறுவனங்களில் தற்போதைய பாலிசி மாறிவிட்ட நிலையில் நாம் வாங்கும் பொருட்களுக்கு பில் என்பது மிக முக்கியமான ஒரு விஷயமாக தற்போது மாறி போய் உள்ளது. இந்த செய்தியை ஒரு விழிப்புணர்வுக்காக உங்கள் முன் வைக்க கடமைப்பட்டுள்ளேன்.

மடிப்பாக்கம் பகுதி செயலாளர் திரு.விஜயராஜா அவர்கள் நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளின் பள்ளிக்கூட படிப்பு மற்றும் கல்லூரி படிப்பு தொடர ஒரு சேவை நோக்கத்தோடு செயல்பட்டு அவருக்கு தெரிந்த சில அறக்கட்டளைகள் மூலம் கல்விக்கட்டணத்தை பெற்றுக் கொடுத்து வருகிறார். மேலும் பலருக்கு கல்வி கட்டணம் பெற்று தருவதாக உறுதி அளித்துள்ளார். இவருடைய சேவை தொடர்ந்திட, நமது சங்கம் சார்பாக மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்.

21.10.2022 அன்று வடசென்னை சார்பாக, சவுகார்பேட்டை, வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர், கொடுங்கையூர், மற்றும் எண்ணூர் போன்ற பகுதியைச் சேர்ந்த ஸ்டூடியோ

உரிமையாளர்களை கூட்டி ஸ்டுடியோக்களில் பாஸ்போர்ட் முதல் இதர விஷயங்களுக்கு விலைப்பட்டியல் வெளியிடுவது தொடர்பாக முதல் கட்டமாக கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு நமது சங்க பொருளாளர், திரு.K.ஜெயபால் அவர்களின் மேற்பார்வையின் பெயரில் , வட சென்னை துணைத் தலைவர் A.கவுஸ் பாட்ஷா, அவர்கள் தலைமை தாங்கினார் , வடசென்னை இணை செயலாளர், திரு.P.பிரபாகரன் அவர்கள் முன்னிலை வகித்தார். வடசென்னை பகுதியின் பல்வேறு பகுதி செயலாளர்களும் கலந்து கொள்ள இந்த கூட்டம் நடைபெற்றது. இதுபோன்ற கூட்டங்கள் வெவ்வேறு பகுதியிலும் நடத்தி எல்லோருடைய கருத்துகளை கேட்ட பிறகுதான், மூலப்பொருட்களின் விலை உயர்வு காரண மாக ஸ்டுடியோகளில் கட்டண உயர்வு குறித்து பத்திரிகை விளம்பரம் வெளியிட முடிவு செய்யப்பட்டது. இந்த பொதுக்குழுவின் ஒப்புதலுடன் பத்திரிகை விளம்பரம் வரும் மாதத்தில் வெளியிட ஏற்பாடு செய்து வருகின்றோம். இதை எல்லா உறுப்பினர்களும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

இந்த வருடத்தில் வருத்தப்பட வேண்டிய ஒரு விஷயமாக நான் கருதுவது, நமது சங்கத்தை சேர்ந்த 12 சங்க உறுப்பினர்கள் ,உடல் நலம் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்திருப்பது வேதனைக்குரியது. கொரோனா காலத்தைத் தவிர எந்த வருடமும் இப்படி நடந்ததில்லை. அதன்படி வண்ணாரப்பேட்டை பகுதி உறுப்பினர் ஜெயபிரகாஷ், நமது சங்கத்தின் மேற்கு மாம்பலம் முன்னாள் பகுதி செயலாளர் , வெங்கட்ராம், புரசைவாக்கம் பகுதி உறுப்பினர் பட்டாபி, ரெட்ஹில்ஸ் பகுதி உறுப்பினர் நந்தகுமார், சைதாப்பேட்டை பகுதி முன்னாள் பகுதி செயலாளர் சுரேஷ், போரூர் பகுதி சீனிவாசன், அயனாவரம் பகுதி தேவி கலர்லேப் நடராஜ், மந்தவெளி மூ.பாபு, எல்லிஸ் ரோடு ஆயுட்கால உறுப்பினர் மதன் கலர்லேப் மதனகோபால், தாம்பரம் பகுதி காமராஜபுரம் உறுப்பினர் சுருளி வேல் , திருவொற்றியூர் பகுதி உறுப்பினர் முருகன், மயிலாப்பூர் பகுதி உறுப்பினர் துரை இளங்கோ, ஆகியோர் இன்று நம்மை விட்டு பிரிந்து சென்று விட்டனர் . இவர்கள் அனைவருக்கும் நமது பொதுக்குழுவின் தீர்மானப்படி ஈமச்சடங்கு செய்ய இவர்களுடைய குடும்பத்திற்கு தலா 20 ஆயிரம் ரூபாய் என, ஆக மொத்தமாக 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரேயொரு சங்க உறுப்பினருக்கு மட்டும் விதிமுறைகளுக்கு உட்பட்டு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லிஸ் ரோடு மதன் கலர் லேப் உரிமையாளர் மதனகோபாலுக்கு வழங்கப்பட்ட ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை, நமது சங்க உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு அவருடைய குடும்பத்தின் சார்பாக தெரிவிக்கப்பட்டது. இக்கட்டான அந்த சூழ்நிலையிலும், நமது சங்க உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய மதன் அவர்களின் குடும்பத்தினரை இப்பொதுக்குழு பாராட்ட கடமைப்பட்டுள்ளது.

8.11.2022 அன்று CVPA தலைவர் செல் .செல்வம் அவர்கள் தலைமையில் செயற்குழு கூடி சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. அதன்படி 10 வருடங்கள் நிறைவு செய்த ஆயுட்கால உறுப்பினர்களுக்கு இன்சூரன்ஸ் தொடர்வது, தொடர்பாக பலமுறை நினைவூட்டியும் அதை அவர்கள் இன்சூரன்ஸ் தொகையை செலுத்த தவறி விட்டனர். எனவே 2009 மற்றும் 2013 ஆம் ஆண்டின் பொதுக்குழுவின் முடிவின்படி, இன்சூரன்ஸ் பெயர் பட்டியலில் இருந்து அவர்கள் பெயர் நீக்கப்படலாம் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளதை பலமுறை எடுத்துக் கூறியும் அவர்கள் பணம் செலுத்தாத காரணத்தால், சங்கத்திற்கு பெரும் அளவு பொருளாதார இழப்பு ஏற்பட்டது. இம்முறை இறுதியாக 204 ஆயுட்கால உறுப்பினர்களுக்கு பதிவுத்தபால் அனுப்பி மீண்டும் நினைவூட்டப்பட்டது. இப்போதும் பணம் செலுத்தவில்லை என்றால் அவர்கள் பெயரை இன்சூரன்ஸ் பட்டியலில் இருந்து நீக்கலாம் என்று, பொதுக்குழுவின் பரிந்துரையை ஏற்று செயற்குழுவில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதில் நிறைய ஆயுட்கால உறுப்பினர்கள் தங்களுக்கு இன்சூரன்ஸ் தேவையில்லை என, கடிதம் கொடுத்துள்ளார்கள்.

டிசம்பர் மாத இறுதிக்குள் வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை 1 , தென் சென்னை 2 ஆகிய பகுதிகளில் ஒர்க் ஷாப் நடத்த அந்தந்த பகுதியைச் சார்ந்த துணைத் தலைவர்கள், இணைச்செயலாளர்கள், பகுதி செயலாளர்களை செயற்குழு மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

நமது தேர்தல் அதிகாரிகளால் நிரப்பப்படாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட ஆதம்பாக்கம், போரூர், அசோக் நகர், போன்ற பகுதிகளுக்கு செயற்குழுவில் விண்ணப்பம் வந்ததைத் தொடர்ந்து, ஆதம்பாக்கம் பகுதிக்கு டி .சுரேஷ் அவர்கள் பகுதி செயலாளர் ஆக நியமிக்கப்பட்டார். போரூர் பகுதிக்கு ஏ .ஜான் நிக்கோலஸ் அவர்கள்

பகுதி செயலாளராக நியமிக்கப்பட்டார். அசோக் நகர் பகுதிக்கு, எஸ் .எழில் ராஜ் அவர்கள் பகுதி செயலாளராக நியமிக்கப்பட்டார்.

மாநில சங்கம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட அவசர பொதுக்குழுவில், நமது சங்கம் சார்பாக மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

மடிப்பாக்கம் பகுதியை உள்ளடக்கிய நங்கநல்லூர், புழுதிவாக்கம் ,மூவரசம் பேட்டை , நன்மங்கலம் மற்றும் கோவிலம்பாக்கம் பகுதி உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் நிக்கான் ஒர்க் ஷாப்பை மடிப்பாக்கம் பகுதி செயலாளர் விஜயராஜா அவர்கள் ஏற்பாடின்படி செய்யப்பட்டது.

மதிய சென்னை துணைத்தலைவர் வேல்முருகன் அவர்கள், இணைச் செயலாளர் தனகோட்டி அவர்கள், மற்றும் மத்திய சென்னை பகுதி செயலாளர்களின் , ஏற்பாட்டின்படி சென்னை அயனாவரம் சக்தி திருமண மண்டபத்தில் வேலைக்காரன் செந்தில் மற்றும் செந்தில்குமார் ஆகியோரை கொண்டு போட்டோ ஷாப் மற்றும் வீடியோ எடிட்டிங் ஒர்க் ஷாப் நடைபெற்றது. மத்திய சென்னை பகுதியை சார்ந்த நமது சங்க உறுப்பினர்கள் இந்த ஒர்க் ஷாப்பில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள் இந்தப் பயிற்சி வகுப்பிற்கு 5000 ரூபாய் நன்கொடை அளித்த அயனாவரம் பகுதி செயலாளர் ரகுநாத் பாபு அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடசென்னை, திருவொற்றியூர் பகுதி டி.கே.பி திருமண மண்டபத்தில் அடோப் போட்டோஷாப் குறித்து மோகி மோகன் அவர்களுடைய ஒர்க் ஷாப் நடைபெற்றது. வடசென்னை துணைத் தலைவர் கவுஸ் பாஷா அவர்கள், இணைச்செயலாளர் பிரபாகரன் ஆகியோர் ஏற்பாட்டின்படி இந்த ஒர்க் ஷாப் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி நடைபெற டி கே பி மண்டபத்தை அதன் உரிமையாளர் ஆசை தம்பி அவர்கள் இலவசமாக வழங்கினார்கள். அவர்களுக்கு இந்த பொதுக்குழுவின் மூலமாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பானாசோனிக் நிறுவனம் சார்பாக அறிமுகம் செய்யப்பட்ட புதிய மாடல் கேமரா டெமோ நிகழ்ச்சி பாவ்சர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் செயற்குழு உறுப்பினர்களும், நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

சென்னை எஸ் வி எஸ் கிளப்பில், பானாசோனிக் கேமரா டெமோ, மெட்ரோ மீடியாவின் டிஜிபிளக்ஸ் டெமோ, சோனி கேமரா டெமோ, ஆகியவை ஒரு நாள் முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்கு நன்கொடை அளித்த மெட்ரோ மீடியா டிஜிபிளக்ஸ் ஆல்பம் மற்றும் சோனி நிறுவனத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

2023 ஆம் ஆண்டிற்கான டைரி , மினி டைரி, காலண்டர் ஆகியவற்றை சங்க நிர்வாகிகள் தங்களுடைய நேரடி மேற்பார்வையில் தயாரிக்க செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி, குறுகிய காலத்தில் இப்பணிகள் செய்து முடிக்கப்பட்டது. விளம்பரதாரர்கள் தந்த முழு ஒத்துழைப்பின் காரணமாக இந்த ஆண்டு டைரி டிசம்பர் 31க்குள் விரைவாக கொடுத்து முடிக்கப்பட்டது. இதற்கு துணைத் தலைவர்களும், இணைச் செயலாளர்களும், பகுதி செயலாளர்களும் துரிதமாக செயல்பட்டு அந்த பணியை சிறப்பாக செய்து முடித்தார்கள். இவர்கள் அனைவருக்கும் இப்பொதுக் குழுவின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கத்தின் நிறுவனரும், முன்னாள் செயலாளருமான, அமரர் .ரவிச்சந்திரன் அவர்களின் நினைவு நாள் நமது சங்க அலுவலகத்தில் அனுசரிக்கப்பட்டது. அன்று அவரது திருவுருவப்படத்திற்கு சங்கத் தலைவர் செல். செல்வம் அவர்களும், செயலாளர் பிரேம்குமார் ஆகிய நான், பொருளாளராகிய ஜெயபால் அவர்களும், பிஆர்ஓ ஆகிய ரவிக்குமார் மற்றும் சக நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும், முன்னாள் செயலாளர் துரைபாபு அவர்களும், ஏனைய சக முன்னாள் நிர்வாகிகளும் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள். அன்றைய தினம் ஏழை எளிய மக்களுக்கு சங்க அலுவலகத்தின் முன்பாக அன்னதானமும் வழங்கப்பட்டது.

நமது சங்க அலுவலகத்தில் குடியரசு தினத்தை முன்னிட்டு தேசியக்கொடி ஏற்றப்பட்டது. நமது சங்கத் தலைவர் செல். செல்வம் அவர்கள் மூவண்ண கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநிலத் துணைத் தலைவர் சரவணன் அவர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள் .முன்னாள் செயலாளர் துரை பாபு அவர்களும், ஏனைய முன்னாள் சக நிர்வாகிகளும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

# சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in ✆ : 2860 7821,Cell : 7824034734

பதிவு எண் 446/96


21.02.2023 அன்று சென்னை எஸ் வி எஸ் கிளப்பில் செயற்குழு கூட்டம் கூட்டப்பட்டது இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நமது சங்க அலுவலகம் செயல்படும் இடத்தின் உரிமையாளர் குத்தகை முறையில் இருந்து வாடகையாக மாற்றுவது குறித்து நிர்வாகிகளை சந்தித்து கூறினார். இது குறித்து செயற்குழுவில் விவாதிக்கப்பட்டது. இதன்படி ஜனவரி மாதம் முதல் அலுவலக வாடகை 8000 ரூபாய் எனவும் இதற்கு அட்வான்ஸ் தொகை 80 ஆயிரம் ரூபாய் எனவும் முடிவு செய்யப்பட்டது.

காலம் சென்ற வட சென்னை சங்க உறுப்பினர் பிரகாஷ் அவர்களின் மகளுக்கு தேவையான கல்வி கட்டணம் செலுத்த உதவி செய்யுமாறு அவருடைய குடும்பத்தினர் நமது சங்கத்திற்கு கோரிக்கை வைத்தனர். இதன் முயற்சியாக நமது சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும் , தேர்தல் அதிகாரியுமான திரு. எழில் ஆனந்த் அவர்கள் அந்த மாணவி படிக்கும் பள்ளிக்கூட நிர்வாகத்துடன் பேசி சலுகை பெற்றுக் கொடுத்தார். ஆனாலும் அந்த மாணவியால் அதுவும் செலுத்த முடியவில்லை. உடனே புரசைவாக்கம் பகுதி செயலாளர் எஸ் கே வீடியோ சீனு அவர்கள் அந்த ஆண்டிற்கான கல்வி கட்டணத்தை அவரே செலுத்துவதாக ஒப்புக்கொண்டார். இப்பொதுக்குழுவில் இந்த இருவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

சில மாதங்களுக்கு முன்பு உடல்நலம் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொண்டு வந்த மந்தவெளி மூ. பாபு அவர்களின் மருத்துவ செலவிற்கு உதவிடும் நோக்கத்தில் தென் சென்னை எஸ். 2 சார்பாகவும் , சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சில நண்பர்கள் மூலமாக கிடைத்த 38,551 ரூபாயை மந்தைவெளி மூ.பாபு அவர்களிடம் அப்போது நேரடியாக வழங்கப்பட்டது.

உலகப் புகழ் பெற்ற ரோலண்ட் நிறுவனம் தனது புதிய வீடியோ மிக்ஸர் மற்றும் ஸ்ட்ரிம்மிங் சொல்யூஷன் தொடர்புடைய சாதனங்களை சென்னை வடபழனி கிரீன் பார்க் ஹோட்டலில் காட்சிப்படுத்தியது. இந்நிறுவனத்தின் அழைப்பை ஏற்று நமது சங்க நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

நமது சங்க உறுப்பினர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கும்போது அவர்களுடைய மருத்துவ உதவிக்காக ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இதுவரை மந்தவெளி மு. பாபு அவர்களுக்கும், தி.நகர் முன்னாள் செயற்குழு உறுப்பினர் சத்திய குமார் அவர்களுக்கும், திருவொற்றியூரை சேர்ந்த திரு அவர்களுக்கும் , வண்ணை பகுதி உறுப்பினர் கண்ணன் அவர்களுக்கும், கொடுங்கையூர் பகுதி உறுப்பினர் தணிகாச்சலம் அவர்களுக்கும் , தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

சென்னை மாவட்ட சங்கத்தின் சார்பாக மாநில சங்கத்திற்கு அனுப்பப்பட்ட முன்னாள் மாநில இணைச் செயலாளர் பாலச்சந்தர் அவர்களின், மேலான முயற்சியின் காரணமாக டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழகத்தில் நமது தொழில் சார்ந்த கலைஞர்களின் பிள்ளைகள் கல்லூரியில் சேர்ந்து படிக்க இலவச சீட் பெற்றுக் கொடுத்தார். இதன் மூலம் தமிழ்நாடு நமது தொழில் சார்ந்த கலைஞர்களின் பிள்ளைகள் கல்லூரியில் சேர்ந்து படித்து பயன் பெற்று வருகிறார்கள். இந்த சேவையை திறம்பட செய்தமைக்காக, பாலச்சந்தர் அவர்களை இந்த பொதுக்குழு முன் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

மாநில சங்கம் சார்பாக டிஜி மீடியா 2023 கடந்த ஏப்ரல் மாதம் 14,,15 ,16 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. இந்த எக்ஸ்போவில் நமது சங்கத்தின் அழைப்பை ஏற்று திரு. ராஜாபொன்சிங் அவர்கள் சில மணி நேரம் கலந்து கொண்டு இன்றைய ஒளிப்படத் தொழிலில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்து கலந்துரையாடினார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நமது சங்க உறுப்பினர்களின் மருத்துவ உதவிக்காக அறிமுகம் செய்யப்பட்ட நலம் திட்டம் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் ஒரு சிலர் மட்டுமே பயன் பெற்றார்கள். இதே திட்டம் சமீபத்தில் நடைபெற்று முடிந்த டிஜி மீடியா எக்ஸ்போவில் மீண்டும் விரிவுபடுத்தி, மாநில சங்க நிர்வாகிகள் முன்னிலையில் ஏசிஎஸ் அருண்குமார் அவர்கள் நலம் திட்ட கார்டை வெளியிட்டார். நமது சங்க உறுப்பினர்களின் நலன் கருதி இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த உதவிய பாலச்சந்தர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்
எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in ✆ : 2860 7821,Cell : 7824034734
பதிவு எண் 446/96

நமது சங்க உறுப்பினர் ஜனனி ஸ்டில்ஸ் சீனிவாசன் அவர்களின் மகள் ஜனனி பிரியா அவர்கள் லண்டன் எக்ஸ் எக்ஸ் யுனிவர்சிட்டியில் எம் எஸ் டேட்டா சையின்ஸ் படித்து முடித்து அங்கே பட்டம் பெற்றுள்ளார்.இவருக்குநமது பொதுக்குழுவில் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் கணேஷ் - கிரிஜா தம்பதியினரின் இரட்டைக் குழந்தை பிள்ளைகளான ஸ்ரீ மனோரஞ்சன், ஸ்ரீ மதுமிதா ஆகிய இருவரும் இந்த ஆண்டு நடைபெற்ற பிளஸ் 2 பொதுத்தேர்வில் இருவரும் ஒரே(530) மதிப்பெண் பெற்று அசத்தியுள்ளனர். இவர்களுக்கு இந்த பொதுக்குழுவின் மூலமாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கத்தின் முன்னாள் பகுதி செயலாளர் ரஜினி பத்மநாபன் அவர்களின் மகள் பவித்ரா தலைமையிலான ஹாக்கி டீம், தமிழக முதல்வரின் வெற்றி கோப்பையை வென்று சாதித்துள்ளார். இவருக்கும் இந்த பொதுக்குழுவின் மூலமாக பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது சங்கத்திற்காக பிரத்தியேகமாக தொடங்கப்பட்டுள்ள, யூடியூப் சேனலை அவ்வப்போது முக்கிய நிகழ்ச்சிகளை ஸ்ட்ரிம்மிங் செய்து வருகிறோம். இனி வரும் காலங்களில் இந்த யூடியூப் சேனலில் இன்னும் பல முக்கிய செய்திகளை காணும் வகையில் ஏற்பாடு செய்ய உள்ளோம் . உறுப்பினர்கள் அனைவரும் கண்டு களித்து பயன்அடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சோனி நிறுவனம் தற்போது மேம்படுத்தப்பட்ட மிரர் லஸ் கேமராக்களை அறிமுகம் செய்து வருகிறது. இந்நிறுவனம் நமது சங்கத்தை நாடி வந்து கேட்டுக் கொண்டதற்கு இணங்க , தென் சென்னை -எஸ்.1 , தென் சென்னை -எஸ்.2 , மத்திய சென்னை, வடசென்னை, ஆகிய நான்கு பகுதிகளிலும் சோனி ஒர்க் ஷாப் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்தோம். இதற்கு சோனி கிஷோர், சதீஷ், ஜெகநாதன், முஸ்தபா ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு உறுதுணையாக இருந்த நமது சங்க துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடாக்ஸ் நிறுவனம் மற்றும் ஷீதெல்லா ஏஜென்சிஸ் நிறுவனம் சார்பாக மதுரை பாரதி அவர்கள் நடத்திய ஒர்க்ஷாப்பில் நமது சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

நமது நிர்வாகத்தின் செயல்திறன் குறித்து சிலர் அறியாமையின் காரணமாக, எதிர்மறையான விமர்சனங்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டு வந்தாலும், முன்னாள் நிர்வாகம் எடுத்த அதே முடிவின்படி எதிர்மறையான விமர்சனங்களை புறந்தள்ளிவிட்டு எங்கள் பணியை செவ்வனே செய்து வருகிறோம். பொதுக்குழு உறுப்பினர்களாகிய உங்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே நாம் நினைப்பதை சாதித்துக் காட்ட முடியும் என்ற நம்பிக்கையில் எங்கள் பணியை தொடர்ந்து செய்து வருகிறோம். இப்பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட இருக்கும் முக்கிய தீர்மானங்கள் நமது சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறோம். நமது சங்க தலைவர், திரு.கு.செல்.செல்வம் அவர்கள் தலைமையிலான நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் அனைவரும், நம் தொழில் கலைஞர்களின் முன்னேற்றத்திற்காக எப்போதும் துணை நிற்போம் என்று உறுதி அளிக்கிறோம்.

இப்படிக்கு

D.M. Prem Kumar

**DM. பிரேம்குமார்,**
CVPA செயலாளர்.